# தாகி பிரபம்

ஆசிரியர்
ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச்.மௌலானா



# தாகி பிரபம்

ஜமாலிய்யா சையிது
கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய்

முதற்பதிப்பு : அக்டோபர் **2000**
உரிமை : ஆசிரியருக்கு
பிரதிகள் : **2000**

**இரண்டாம் பதிப்பு : மே 2007**

**துபை ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையினரால்**

**2007 மே 25, 26, 27** **சென்னையில்**

**நடைபெற்ற** **அனைத்துலக**



**இஸ்லாமியத்** **தமிழ் இலக்கிய**

**ஏழாம் மாநாட்டில்** **வெளியிடப்பட்டு**

**அன்பளிப்பாக வழங்கப்பட்டது.**

இந்நூலினை பிரதிகள் அல்லது நகல்கள் எடுத்து விநியோகிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

© All Rights belong to original author. Reproduction in the form of either Photocopy or Printing is strictly prohibited.

நூலாசிரியர்



அஷ்ஷைகு ஜமாலிய்யா சையிது கலீல் அவ்ன் மௌலானா
அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய்

## நூலாசிரியர் பற்றி சிறு குறிப்பு

ஜமாலிய்யா சையிது கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தமான திருக்குடும்பத்தில் 34-ஆம் தலைமுறைத் தோன்றலாகவும், வலிகள் கோமான் கௌதுல் அஉலம் முஹியுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் 21-ஆம் தலைமுறையாய் உதித்தவருமாவார்கள். இவர்களின் பாட்டனார் கௌதுஸ்ஸமான் ஜமாலிய்யா மௌலானா அவர்கள் பகுதாதிலிருந்து இந்தியா வந்து இஸ்லாமிய மெய்ஞ்ஞானம் பரப்பி தமிழகத்திலுள்ள சம்பைப்பட்டினத்தில் அடக்கமாயுள்ளார்கள் புகாரி ஷரீபு க்கு விரிவுரை எழுதியவர்களும், அரபு-அரபுத்தமிழ் அகராதியை முஸ்லிம் உலகிற்குத் தொகுத்து வழங்கியவர்களும், இன்ஸானுல் காமில் என்ற ஆத்மஞான நூலுக்கு விரிவுரை எழுதியவர்களும், அரபு மொழியில் நிகரில்லாப் புலமை பெற்று அது போன்றே பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கியவர்களுமான குத்புல் அக்தாப் ஜமாலிய்யா சையது யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் இவர்களின் தந்தையாவார்கள். அவுன் நாயகமவர்கள் தங்கள் தந்தையாரிடமே அரபிக் கல்வியையும் ஆன்மீகக் கல்வியையும் முழுமையாகப் பயின்று அவர்களின் ஆன்மீக வாரிசாகத் திகழ்கிறார்கள். அவர்கள் தோற்றுவித்த அத்தரீகதுல் ஹக்கியதுல் காதிரிய்யா வெனும் தரீகாவைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தி மக்களுக்கு ஆன்மீக அறிவூட்டும் ஒப்பற்ற காமில் ஷைகாக விளங்குகிறார்கள்.

அரபு மொழியில் இவர்கள் இயற்றியுள்ள பேரின்பப்பாக்கள் இவர்களின் அரபுமொழிப் புலமையையும், ஆன்மீக உச்சத்தையும் புலப்படுத்தும். தமிழ்மொழியில் இவர்கள் பெற்றிருக்கும் புலமையோ வார்த்தைகளால் வடிக்க முடியாதது. சங்ககாலப் புலமையை இவர்களின் தமிழ் ஆக்கங்களில் காண முடியும். தமிழுக்கு ஒரு புதிய பிரபந்தத்தையே தோற்றுவித்துத்

தந்த நாயகர் பன்னிருபாடல், சித்திரக் கவிதைகளால் அலங்கரிக்கப்பட்ட மகானந்தாலங்காரமாலை, இலங்கைச் சாகித்திய மண்டலத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈழ வள நாட்டில் பயிர்பெருக்க வாரீர், இறைவலிய் செய்யிது முஹம்மது மௌலானா போன்ற கவிதை நூற்களில் இவர்களின் யாப்புத் திறனையும் ஆழமான கவிதையாற்றலையும் காணமுடியும். ஞானம் என்றால் என்னவென்று அறிந்துகொள்ளத் துடிப்பவர்களுக்கு அறிமுக நூலாக எழுதப்பட்ட பேரின்பப்பாதை யும் ஹகாயிகுஸ்ஸபா,துஹ்பதுல் முர்ஸலா போன்ற அரபு நூற்களுக்கு எழுதிய விளக்கமும் தமிழ் முஸ்லிம் உலகுக்கு இவர்கள் அளித்த ஞானப் புதையல்களாகும்.

இலங்கை, தமிழகம், சிங்கப்பூர், மலேஷியா மற்றும் அரபு நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் எண்ணிறந்த பேருக்கு ஞானத்தந்தையாக விளங்கும் இவர்களின் ஞான வழிகாட்டல் குர் ஆன், ஹதீஸின் அடிப்படையிலானது. இறைவனின் சன்னிதானம் வரை நம்மைக் கொண்டு சேர்ப்பது. முஹியுத்தீன் ஜீலானி ஆண்டகை (ரலி), முஹையத்தீன் இப்னு அரபி(ரலி), அப்துல் கறீம் ஜீலி (ரலி) போன்ற மகான்களின் வஹ்ததுல் வுஜூது (ஒரே உள்ளமை) எனும் ஏகத்துவத் தத்துவத்தை உள்ளடக்கியது. அஹ்லுஸ் ஸுன்னத்வல் ஜமாஅத் கொள்கைக்கு உயிர்கொடுத்தது. இமாம்கள் காட்டிய மத்ஹப் வழி நடந்து, எம்பெருமானார் (ஸல்) அவர்களை உயிரிலும் மேலாகப் போற்றிப் புகழ்ந்து வலிமார்களின் வழியில் நடக்கச் சொல்லுவது.

அவ்வலுத்தீனி மஃரிபதுல்லாஹ் (மார்க்கத்தின் முதன்மையானது அல்லாஹ்வை அறிவது) என்ற நபி மொழிக்கேற்ப தன்னையறிந்து தலைவனையறியும் ஞானவழியை மக்கள் அறிந்து கொள்வதற்காக ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை (லஜ்னதுல் இர்பானித் தவ்ஹீத்) என்ற ஒரு இயக்கத்தை இவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். முழுக்க முழுக்க ஞானத்தையே கருப் பொருளாகக் கொண்டு வெளிவரும் மாத இதழ் ஒன்றை மறை

ஞானப்பேழை என்ற பெயரில் வெளியிடச் செய்துள்ளார்கள். அரபி மதரஸாக்களில் தஸவ்வுப் என்னும் ஞானக்கல்வியை அறவே ஒதுக்கிவிட்ட இந்தக்காலகட்டத்தில் ஞானத்திற்கு முதலிடம் கொடுத்துப் புகட்டும் ஞானக்கேந்திரமாக மதரஸதுல் ஹஸனைன் என்ற பெயரில் ஓர் அரபிக்கல்லூரியை திருச்சியில் நிறுவியுள்ளார்கள். இக்கல்லூரியில் தொழிற் கல்வியும் புகட்ட ஏற்பாடு செய்திருப்பது ஓர் அழகிய முன்மாதிரியான சாதனையாகும்.

"நம்மை மதிப்பதற்காக நாம் ஞானத்தை மக்களுக்கு கூறவில்லை" என்று அடக்கத்தோடு கூறும் இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பரம்பரையில் உதித்திருப்பது மாபெரும் சிறப்பிற்குரியதாகும். தத்துவத்தின் வித்தகராய் விளங்கும் மெய்ஞ்ஞான சொரூபர் ஜமாலிய்யா சையிது கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள், தங்களின் பாட்டனார் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் புனித வாழ்க்கை முறையையும், நெறியையும் பின்பற்றி வாழ்ந்து அதனை மக்களுக்கு ஏற்றவாறு எத்திவைக்கும் பேராற்றல் பெற்றவர்கள். இறையின் பண்புகளை இதயத்தில் ஏந்தி நானும் உங்களைப் போல் மனிதன் தான் என்ற நிலையில் மக்களுடன் நெருங்கிப் பழகி மக்களை நேரிய முறையில் பயிற்றுவிப்பவர்கள். அல்லாஹுத்தாலாவை, பெருமானார் (ஸல்) அவர்களை பற்றி அறியாத மக்கள் மத்தியில், இறைவனின் பெருமையையும், எம் பெருமானார் (ஸல்) அவர்களின் புனித நிலையையும் விளக்கி பெருமானார் (ஸல்) அவர்களின் மீது அளவிலா பிரியம் கொள்ள வைப்பவர்கள்.

எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் இவர்கள், மற்றவர்களையும் சுறுசுறுப்பாக இருக்க அறிவுறுத்துவார்கள். தவறு செய்தவர்களை கண்டிக்கும் போது, அவர்களின் மனம் கோணாமல் அந்த தவறினை சுட்டிக்காட்டி சீர்திருத்தம் செய்யும் செம்மலாக திகழ்கிறார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் புனித பண்புகளை சுமந்து அனைவர் மீதும் அன்பு காட்டும்

பெருமகனாவார்கள். நாயகம் (ஸல்) அவர்களின் மீது மாறாத அன்பு கொண்டு அவர்களின் நற்குணங்களையே தங்களின் சொந்தகுணங்களாகக் கொண்டு திகழ்கிறார்கள்.

"மனிதனை மனிதானாக வாழவைப்பதே சிரமம். அதனையே எம்பாட்டனார் செய்தார்கள். அதுதான் ஷரியத்." என்று கூறி ஷரியத்தை பாதுகாத்து, ஐந்து நேர தொழுகையையும், அனைவருக்கும் அருட்கொடையாக வந்த திருக்குர் ஆனை தினமும் பஜ்ர் தொழுகைக்குப் பின் ஓதுவதையும் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்துபவர்கள். இறையின் சிறப்புக்களை, அவர்களுக்குரிய அழகுதமிழிலும், அரபியிலும் மக்களுக்கு புரியும் படி கூறி விளங்க வைப்பவர்கள்.

சாந்தியும், சமாதானமும் எங்கும் நிலவ, மனிதன் மனிதனாக, மனித நேயம் பேணி வாழ்ந்து, மானுட உண்மையை அறிய வேண்டும் என்று கூறி அதற்காக பாடுபடும் இவர்கள், மானிட உண்மையை அறிவதே ஞானத்தின் நோக்கம் எனக் கூறி மக்களை நேர்படுத்துபவர்களாகவும் திகழ்கிறார்கள். இன்னும் பல அறிய பொக்கிஷங்களை உலகிற்கு அளிக்க இருக்கின்றார்கள்.

ஹய்யுல் கய்யூமாகிய அல்லாஹ்வில் தங்களை அர்ப்பணித்த, பெருமைமிகுந்த அண்ணலவர்களின் அருந்தவ ஆக்கங்கள், சிறப்புமிகு ஞானக்குவியல்களை இவ்வுலகம் பெற்று சிறப்படைய எல்லாம் வல்ல நாயனே கிருபைசெய்ய போதுமானவன்.

# தாகி பிரபம்

## எம் கருத்து

இந்நூற் "றாகி பிரபம்" எனும் பெயருடைத்து. இதன் கருத்து, தாகமுடையோருக்கான நீர்ப் பந்தர் என்பதாம்.

எவருக்கு ஞானத்தில் அளவற்ற தாகம் (பிரியம்) உள்ளதோ அவருக்கிந்நூல் ஒரு நீர்ப்பந்தர் எவ்வாறு தாகத்தை நீக்குமோ, அவ்வாறே ஞான வேட்கையை இந்நூல் நீக்கிவிடும் என்பதாம் என்க.

இந்நூல் இறைஞான உதிப்பேயாம். எண்ணத்திற் கிளர்ந்தவை ஏகபேட்டியாகி உதித்ததே இஃதெனின் மிகையாகாது. கருத்தா வினா வகுக்கச் சிருட்டி விடை விடுத்ததே இஃதாம்.

குரோதம் விடுத்துக் குறை தடுத்து நிறையுள மெய்திக் கற்றிடின் இறைத் திருவருளிசையு மென்பதில் ஐயமின்று.

இவ்வழியிற் செல்ல விரும்புவோருக்கே இஃது அமைக்கப்பட்டுள்ளது. ஞான சூனியங் களுக்கன்று.

வாழ்க மெய்ப்பொருள்!
வாழ்க மெய்ஞ்ஞானம் !!
வாழ்க ஞானிகள் !!!

ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச்.மௌலானா.

**இறை கேட்டது:** முதன் முதலில் நீர் எங்கிருந்தீர்?
**யான் விடுத்தது:** இறைவா, நீ, சூக்குமமாய் மறைந்து, நான், நீ யென்றன்றி இல்லாதிருந்த நிலையிலிருந்த போது, நான் உன்னுடன் கலந்திருந்தேன்.

**இறை கேட்டது:** அப்போது நீர் உம்மைக் கண்டீரா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். என்னை யான் கண்டேன்.

**இறை கேட்டது:** எப்படிக் கண்டீர்?
**யான் விடுத்தது:** இறைவா, உன்னில் என்னைக் கண்டேன். அப்போது என்னில் உன்னைக் கண்டேன்.

**இறை கேட்டது:** அப்போது நீர் எப்படியிருந்தீர்?
**யான் விடுத்தது:** இறைவா, உன்னில் யான் கலந்திருந்தேன்.

**இறை கேட்டது:** என்னில் நீர் எப்படிக் கலந்தீர்?
**யான் விடுத்தது:** இறைவா, இடைவெளியின்றிக் கலந்தேன்.

**இறை கேட்டது:** இடைவெளியற்றிருந்தது எப்படி?

**யான் விடுத்தது:** இறைவா, பனிக்கட்டி கரைந்து நீரிற் கலப்பதுபோல்.

**இறை கேட்டது:** அப்போது உமது நிலை யெப்படி யிருந்தது?

**யான் விடுத்தது:** இறைவா, அப்போது நானோ ஏகாந்த நிலையிலிருந்தேன்.

**இறை கேட்டது:** ஏகாந்த நிலையென்பது என்ன?

**யான் விடுத்தது:** இறைவா, நானேயல்லாது பிறி தொன்றையும் காணாது நானே என்னில் என்னைக் கண்ட நிலை. மற்றும் உன்னில் நான் அழிந்து உன்னில் நானாய்ப் பிறிதொன்றி லாதாகி உன்னிலே என்னை நீயாக இரண்டறக் கண்ட நிலை.

**இறை கேட்டது:** அப்போது நீர் எப்படி இருந்தீர்?

**யான் விடுத்தது:** இறைவா, யான் சலனமற்ற நிலையில் பரிபூரண ஆதி நிலை யான சூனிய நிலையிலிருந்தேன்.

**இறை கேட்டது:** அப்போது உமக்குப் பார்வை யிருந்ததா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். என்றேன்.

**இறை கேட்டது:** அது எப்படி?
**யான் விடுத்தது:** இறைவா, பரிபூரணத்தில் பரி பூரணமாய் நின்று பரிபூரணத்தைப் பரிபூரணத்தால் பரிபூரணமாய்ப் பார்த்தேன்.

**இறை கேட்டது:** எப்படிக் கேட்டீர்?
**யான் விடுத்தது:** இறைவா, மேற் சொன்னவாறே கேட்டேன்.

**இறை கேட்டது:** எவ்வாறு சுவாசித்தீர்?
**யான் விடுத்தது:** இறைவா, மேற்சொன்னவாறே தான்.



**இறை கேட்டது:** நீர், எவ்வாறு ருசித்தீர்?
**யான் விடுத்தது:** இறைவா, அவ்வாறேதான்.

**இறை கேட்டது:** எவ்வாறு உணர்ந்தீர்?
**யான் விடுத்தது:** இறைவா, அதுவும் அவ்வாறே.

**இறை கேட்டது:** உமக்குக் கண்ணிருந்ததா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். பரிபூரணமும் கண்ணாக விருந்தது.

**இறை கேட்டது:** உமக்குச் செவியிருந்ததா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். பரிபூரணமும் செவியாயிருந்தது.

**இறை கேட்டது:** :உமக்கு நாசியிருந்ததா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். பரிபூரணமும் நாசி யாயிருந்தது.

**இறை கேட்டது:** உமக்கு வாயிருந்ததா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். பரிபூரணமும் வாயாயிருந்தது.

**இறை கேட்டது:** :உமக்கு ஆக்கையிருந்ததா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம் பரிபூரணமும் எனதாக்கையாயிருந்தது.

**இறை கேட்டது:** இப்படியே பரிபூரணமாயிருந்த போது, உமக்கு ஆரம்பமும் முடிவு மிருந்தனவா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். ஆரம்பமும் முடிவு மிருந்தன.

**இறை கேட்டது:** அஃது என்ன?
**யான் விடுத்தது:** இறைவா, நானே பரிபூரணமான போது பரிபூரணமான எனக்கு நானே ஆரம்பமும் முடிவுமானேன்.

**இறை கேட்டது:** நான் எனும் பரிபூரணத்திற்கு உள்ளும் புறமுமிருந்தனவா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். இருந்தனவே.

**இறை கேட்டது:** அஃது எப்படி?
**யான் விடுத்தது:** இறைவா, அதுவே (பரிபூரணம்) தானே அதற்கு உள்ளும் புறமும்.

**இறை கேட்டது:** அதற்குத் திக்குத் திசைகளிருந் தனவா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம். இருந்தன. அதற்குத் திக்குந் திசைகளும் அதுவே தானே.

**இறை கேட்டது:** அதற்கு மேல், கீழ், உயரம், பள்ளம் எல்லாமிருந்தனவா?

**யான் விடுத்தது:** இறைவா, ஆம். மேல், கீழ், உயரம், பள்ளம் எல்லாம் அதற்கு அதுவே யாயிருந்தன.

**இறை கேட்டது:** பரிபூரணத்திற்கு இவ்வளவு தான் என்னும் மட்டும் அளவும் கனமு முண்டா?

**யான் விடுத்தது:** இறைவா, பரிபூரணம் (நான்) அளவிட முடியாதது; மட்டிட முடியாதது; நிறையிட முடியாதது. பூரணத்திற்குப் பூரணமே அளவு. அதற்கு அதே மட்டு. அதற்கு அதுவே நிறை.

**இறை கேட்டது:** அதற்கு (பரிபூரணத்திற்கு) க் கால எல்லையுண்டா? முடிவு உண்டா?

**யான் விடுத்தது:** இறைவா, இல்லையே.

**இறை கேட்டது:** அப்படியானால் அதன் நிலை என்ன?

**யான் விடுத்தது:** இறைவா, அது நான் நீயாகவே நிலை பெற்றிருக்கும்.





**இறை கேட்டது:** அவ்வாறு நிலை பெறும் எனக்கும் உமக்குமிடையே வித்தியாசங்களுண்டா? வேறுபாடுகளுண்டா?

**யான் விடுத்தது:** இறைவா, அது நான் நீ, அது, இது, அவள், அவன், அவர்கள், இவர்கள், நீங்கள், நாங்கள் எனும் வேறுபாடின்றி நிலை பெற்றிருக்கும்.

**இறை கேட்டது:** வானம், பூமி, சூரியன், சந்திரன் முதலானவையெல்லாம் பூரணமாய் என்னிலிருந்து தானே வெளியாயின?

**யான் விடுத்தது:** இறைவா, ஆம், அது, நீ, நான், எனது, உனது, என், உன், என்றில்லாத உன்னிலிருந்துதான் வெளியாயின.

**இறை கேட்டது:** என்னிலிருந்து என்று யான் கூறியதன் தாற்பரியத்தைக் கூறுவீரா?

**யான் விடுத்தது:** ஆம், இறைவா, நீயாகவே வெளி யானாய் என்பதை நீ மறைத்துக் கூறுகின்றாய்.

**இறை கேட்டது:** சிருஷ்டிப் பொருட்கள் எனக் கூறப்படுவன எவை?

**யான் விடுத்தது:** இறைவா, யார் சிருஷ்டித்தார்? நீயிருந்து நீயல்லா வேறு பொருள் களைச் சிருஷ்டிப்பின், உனக்கும் பொருள்களுக்குமிடையே வேறுபாடுண்டல்லவா? அதுதானே இணையென்பது? ஆதலால் நீயாகவேயிருந்து உன்னிலிருந்து வெளியானவற்றைத்தான் சிருஷ்டிகள் என்கிறோம்.



**இறை கேட்டது:** அப்படியாயின் எனக்கும், என்னிலிருந்து வெளியானவைகளுக்குமிடையே வேற்றுமையுண்டா?

**யான் விடுத்தது:** இறைவா, உனக்கும் உன்னிலிருந்து வெளியான சிருஷ்டிகளுக்குமிடையே எவ்வேறுபாடுமில்லை. நீ முன்னிருந்தது போன்றே இப்போதுமிருக்கின்றாய்.

**இறை கேட்டது:** என்னிலிருந்தே வெளியான மனித இனம், என்னை மறந்து விட்டதே?

**யான் விடுத்தது:** இறைவா, உண்மைதான். வெளியாகும் வரை நானும் நீயும் வேறில்லை, ஒன்றே யென்று கூறிக் கொண்டிருந்த மனித இனமெல்லாம், இப்போது நீயார்? நான்யார்? நீயும் நானும் ஒன்றல்லவே எனக்கூறிக் கொண்டிருக்கின்றன. தாய் தந்தையரை அறியா, தாய்



தந்தையர் இல்லா மக்களைப் போன்றுதான் இவர்கள் உள்ளனர்.

**இறை கேட்டது:** மனித இனமல்லாத மற்ற இனங்களின் நிலையென்ன?

**யான் விடுத்தது:** இறைவா, அவையெல்லாம் உன்னில் தானே உள்ளன. அவை உன்னிடத்தே நீயாகி வணக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

**இறை கேட்டது:** என்னில்தான் அவையிருக்கின்றன என்பதற்கும் அவை என்னில் நானாய் வணக்கம் செலுத்துகின்றன என்பதற்கும் நீர் கண்ட முக்கியத் தத்துவம் யாது?

**யான் விடுத்தது:** இறைவா, அவை சிருஷ்டி என அறியாமல் முன்னிருந்த நிலையிலேயே உள்ளன. உன்னிலிருந்து நீயாகவே அவை வெளியாகியும், அவை வெளியாகிய



தன்மையை அறியவில்லை. அவற்றிற்கு புத்தியில்லையே! (மனிதனைப் போன்று) சிந்தனையுமில்லையே! அதற்கு நல்லது, கெட்டதும் தெரியவில்லையே!. இது கூடும், இது கூடாது என்பனவும் தெரிய வில்லையே. அவற்றிற்கு விதி விலக்கள்களும் இல்லையே, ஆகையால் அவைகளின் வணக்கம் தாமே தம்மையறியாத அவையே நீயான நிலையில் வணக்கம் செலுத்துகின்றன.

**இறை கேட்டது:** மனித இனத்தைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?

**யான் விடுத்தது:** இறைவா, குழந்தை பிறந்தபோது அது பரிபூரணத்திலிருந்து (உன்னிலிருந்து) பிரிவுபட்டிருந்த போதும் அது தன் தாற்பரியத்தில் நீயாகவே யிருந்தது. அதற்குச் சிந்தனையிருக்கவில்லை. எந்தப் பொறுப்புமிருக்கவில்லை.



தெய்வீகக் கடாட்சம் அதற்கு இருந்தது. அது உன்னிலிருந்து வெளியான போதும் அது வெளியான சம்பவம் அதற்குத் தெரியவில்லை. அதற்கு எந்த வகையான விதிவிலக்குகளும் இருக்கவில்லை. உன்னில் நீயாகவே இருந்த குழந்தை சிறிது சிறிதாய் வளர்ந்து ஐம்புலன்களும் வினை புரியத் தொடங்கியபோது பிள்ளை அன்றாட அநுபவங்களைப் பெறவும் நான் நீ எனும் வேற்றுமையை அறியவும் தொடங்கிற்று. தான் வந்த வழியை முற்றும் மறந்திடவாயிற்று. விதிவிலக்குகளும் உண்டாயின. அது மனிதனாயது. தன் முன்னைய நிலையை மறந்து நான் வேறு, நீவேறு எனும் பிரிவாகிய இணைவைப்பை அவன் உண்டாக்கிக் கொண்டான். தான் மனம் போன போக்கில் போகவும், அழிவு வேலைகள் செய்யவும், உண்மைக்கு மாறாக நடக்கவும், மானிட நேயம், ஐக்கியம், இரக்கம் மு த ல ா ன ை வ க ை ள உதறித்தள்ளிவிடவும் முற்பட்டு மறமாந்தனாய் மாறிவிட்டான். உ ன் னி லி ரு ந் து வேறுபட்டுவிட்டான். இதனால்

தன்னை மறந்த குற்றவாளியாக மாறினான். தன்னை மறந்துவிடாது, தன்னையறிந்து வாழப்படைக்கப்பட்ட மனிதன், இந்நிலையடைந்தமையால் தான் வந்த பாதையை மறுபடியும் நினைவுகூற ஏவப்பட்டான். தான் வந்த பாதையை நினைவு கூர்ந்தவன் பூரண மனிதனானான். இதை மறுத்தவன் மறுப்பாளனானான், (காபிரானான்).

**இறை கேட்டது:** வந்த பாதை எது?

**யான் விடுத்தது:** இறைவா, உன்னிலிருந்து எவ்வாறு மாற்றமடைந்து வந்தானோ அது தான் அந்தப்பாதை.

**இறை கேட்டது:** அவன் தன்னை யெப்படி அறிதல் வேண்டும்?

**யான் விடுத்தது:** இறைவா, அவன் தன்னைப்பற்றிச் சிறிதேனும் சிந்திக்க வேண்டும். தான் வயோதிபனானமையும் அதற்குமுன்னிருந்த குழந்தைப் பருவம் பற்றியும் சிந்தித்தல் வேண்டும்.

**இறை கேட்டது:** அதன் முன் அவனது நிலையென்ன?
**யான் விடுத்தது:** இறைவா, அது சிசுவாகத் தன் தாயின் கற்பவறையிலிருந்தது. அதற்கு முன் தாயின் கற்பவறையில் சிறு கருவாய்த் தங்கிற்று.

**இறை கேட்டது:** இஃது எவ்வாறு உண்டாயது?
**யான் விடுத்தது:** இறைவா, இஃது தாயினதும், தந்தையினதும் சத்துப் பொருளில் இருந்து உண்டாயது.

**இறை கேட்டது:** இதற்கு முன் அது எங்கிருந்தது?
**யான் விடுத்தது:** இறைவா, தாயினதும் தந்தையினதும் முதுகந்தண்டிலிருந்தது.

**இறை கேட்டது:** அது எப்படி இவ்வாறாயது?
**யான் விடுத்தது:** இறைவா, தாயும் தந்தையும் கூடினமையால் இவ்வாறுண்டாயது.

**இறை கேட்டது:** அது அங்கே எப்படியிருந்தது?

**யான் விடுத்தது:** இறைவா, அது சத்துப்பொருளாயிருந்தது.

**இறை கேட்டது:** இச்சத்துப்பொருட்களை இவர்கள் எங்கிருந்து பெற்றனர்?

**யான் விடுத்தது:** இறைவா, இவர்களைச் சூழ்ந்துள்ள பொருள்களிலிருந்து பெற்றுக் கொண்டனர்.

**இறை கேட்டது:** அப்பொருள்கள் யாவை?

**யான் விடுத்தது:** இறைவா, அவை தாவரப் பொருள்களும், மிருக இனங்களும், மீன் வகைகளும், பட்சி இனங்களும், தட்ப வெப்பங்களும், காற்று முதலான மற்றுமுள்ளவைகளும்.



**இறை கேட்டது:** இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?

**யான் விடுத்தது:** இறைவா, இவையெல்லாம் பஞ்ச பூதங்களிலிருந்து வெளியாயின.

**இறை கேட்டது:** பஞ்ச பூதங்களெல்லாம் எவை?

**யான் விடுத்தது:** இறைவா, அவையெல்லாம் இயற்கை.

**இறை கேட்டது:** அப்படியானால் செயற்கையென்பது என்ன?

**யான் விடுத்தது:** இறைவா, இயற்கை பொருள்களை ஒன்றுகூட்டி இயற்றியவைகளே செயற்கை.

**இறை கேட்டது:** அப்படியாயின் செயற்கையும் இயற்கைதானே?

**யான் விடுத்தது:** இறைவா, ஆம், செயற்கையும் இயற்கைதான்.



**இறை கேட்டது:** அவ்வாறாயின் இயற்கை எங்கிருந்து வந்தது?

**யான் விடுத்தது:** இறைவா, பஞ்ச பூதங்களிலிருந்து இயற்கை வெளியாயிற்று. பஞ்ச பூதங்களும் இயற்கையே.

**இறை கேட்டது:** இப்பஞ்ச பூதங்களெல்லாம் எங்கிருந்து வந்தவை?

**யான் விடுத்தது:** இறைவா, இவையெல்லாம் வானின்றிழிந்தவைகளே.

**இறை கேட்டது:** அப்படியாயின் என்ன?

**யான் விடுத்தது:** இறைவா, பரந்து விரிந்து நிறைந்து தன்னை வெளிப்படுத்தும் நிலையிலிருந்த அதிலிருந்து வந்தவை. இஃதுமியற்கையே.

**இறை கேட்டது:** இதற்குமுன் இஃது எங்கிருந்தது?

**யான் விடுத்தது:** இறைவா, அகண்டாகாரமாய்ப் பரிபூரணமாய் விரிந்து நிறைந்து தனக்குத் தானே காட்சியாய்





மற்றவை யெனவில்லாததாய் மறைந்தும் மறையாததாய் அசையாததாய் துணை இணையில்லாததாய் தனித்துவமாய் ஒன்றாய் இடை வெளியற்று யாங்குமாய்ப் பேதமின்றிப் பிரிவின்றிக் கலந்துறைந்த ஒன்றிலிருந்தே வெளியாயது.

**இறை கேட்டது:** இதற்கு முன் எது இருந்தது?

**யான் விடுத்தது:** இறைவா, இதற்கு முன்னும் இதுவேதான் இருந்தது. வேறொன்று மிருக்கவில்லை. இல்லை, இல்லை, இல்லையே. இதுவே நித்தியம். இதுவே சத்தியம்.



**இறை கேட்டது:** நித்திய சத்தியமென்பதென்ன?

**யான் விடுத்தது:** இறைவா, அது என்றும் நிலைத்து நிற்பது. அதற்கு அன்றும், இன்றும் என்றுமே அழிவுமில்லை. மாற்றமுமில்லை. அது குறைவது மில்லை, கூடுவதுமில்லை. எல்லாம் பரிபூரணம்.

**இறை கேட்டது:** அஃறிணைப் பொருளில் அது என்கிறீரே, அது என்ன?

**யான் விடுத்தது:** இறைவா, அது, இது, அவைகள், இவைகள், அவன், இவன், அவர், இவர், அவள், இவள், இவர்கள், அவர்கள், இவர்கள், நான், நாம், நீ, நாங்கள், நீங்கள் முதலான தன்மை, முன்னிலை, படர்க்கை, பன்மைகள் யாவுமற்ற மொழிதற்கியலாத ஒன்றே அந்த தனித்த வொன்று அதனை அழைக்க எந்த வார்த்தையும் இல்லாத ஒன்றே அதுவான பரிபூரணம்.

**இறை கேட்டது:** ஒன்று என்பது எது?

**யான் விடுத்தது:** இறைவா, அதற்குப்பதிலாக அல்லது அதுபோன்ற அல்லது அதுபோன்ற எத்தனையோ இல்லாத பிறக்காத, பிறப்பிக்காத, அனைத்துமே ஒன்றிலான அனைத்துமே ஒன்றான அந்த ஒன்றே அது.

**இறை கேட்டது:** மேலும் என்னை உம்மால் வருணிக்க முடியுமா?

**யான் விடுத்தது:** இறைவா, உன்னை வருணிக்க என் நா எழவில்லை. கடலுக்கும் எல்லையுண்டு. ஆயினும் உனக்கோ உன் புகழுக்கோ எல்லையில்லை. உன் வருணிப்புக்கும் எல்லையில்லை. முடிவுமில்லை. எங்கும் நீ யாகிய பரிபூரணமே. எங்குச்சென்றாலும் நீயாகிய பரிபூரணமே. பிரபஞ்சம் கூடாது, குறையாது. அதற்கு எல்லையில்லை. அது நிறைகோற்போற் சமமானது.

திணையோ பாலோ எண்ணோ அற்றவனீ இடத்தினுக்கு இடனானாய், காலத்திற்குக் காலமானாய்.

**இறை கேட்டது:** என்னை நீர் புகழ்வதாலும், வருணிப்பதாலும், எனக்கு மதிப்புக் கொடுப்பதாலும், எனக்கு என்ன நன்மையுண்டு?

**யான் விடுத்தது:** இறைவா, நீ புகழுக்குப் புகழானவன், வருணிப்புக்கு வருணிப்பானவன், மதிப்புக்கு மதிப்பானவன். உன்னை எவன் புகழ்ந்தாலும் அப்புகழுக்கு எல்லையுண்டு, ஆனால் உன் புகழுக்கோ எல்லையில்லை. வருணிப்புக்கும் அவ்வாறே, மதிப்புக்கும் அவ்வாறே. நீ தேவையற்றவன். உனக்கு எதுவும் தேவையேயில்லை. அதனால் உனக்கு எந்நன்மையுமில்லை.



**இறை கேட்டது:** என்னை நீர் புகழ்வதாலும், மதிப்புக் கொடுப்பதாலும், வருணிப்பதாலும் உமக்கு என்ன நன்மைகளுண்டு?

**யான் விடுத்தது:** இறைவா, நான் உன்னைப்புகழும் புகழ்ச்சிகளும் மதிக்கும் மதிப்புகளும் வருணிக்கும் பண்புகளும் என்னையே வந்தடைகின்றன. அதுவே யான் பெறும் நன்மைகள். உன்னை நான் இழிவு படுத்தினால் அதுவும் என்னையே வந்தடையும்.

**இறை கேட்டது:** என்னை ஒருகூட்டம் மிகவும் மதித்து நடப்பதுபோலும் மரியாதை கொடுப்பது போலும் நடந்து கொள்கிறார்களே இதன் உண்மை யென்ன?

**யான் விடுத்தது:** இறைவா, உன்னையறிந்தவன் உன்னை மதித்தால் தானே அந்த மதிப்பு சிறப்புடைத்தாகும். அறியாதவன் உன்னை எப்படி மதிப்பான்? அதில் உண்மை யில்லையே? உனக்குக் காலும் கையும் முகமும் வைத்து உன்னை இணைவைத்து வணங்குகிறவர்கள்

உன்னை எப்படித்தான் அறியப்போகிறார்கள். அவர்கள் வணங்கும் வணக்கமும், வணக்கமல்ல. துதிக்கும் துதியும் துதியல்ல.

**இறை கேட்டது:** நீர் இப்படியே பரிபூரணமாய் இருக்க விரும்பினீரா?

**யான் விடுத்தது:** இறைவா, ஆம், இப்படியே இருப்பதோடு என்னை வெளிக் கொணரவும் விரும்பினேன்.

**இறை கேட்டது:** அப்போது பரிபூரணத்திற்கு என்னவாயது?

**யான் விடுத்தது:** இறைவா, அப்போது பரிபூரணம் சலனமடையத் தொடங்கிற்று.

**இறை கேட்டது:** சலனமென்பதென்ன?

**யான் விடுத்தது:** இறைவா, அது தோன்றவிருக்கும் நிலை.



**இறை கேட்டது:** அது எப்படி?

**யான் விடுத்தது:** இறைவா, அஃது யானென்ன விருந்தது நாமாகத் தோன்ற இருந்த ஆரம்ப நிலை.

**இறை கேட்டது:** நான் வெளித்தோன்ற நினைத்தேன் என்கிறீரே அதன் தாற்பரியம் என்ன?

**யான் விடுத்தது:** இறைவா, நானெனக்கூறும் நீ வெளித்தோன்ற நினைத்ததாலே தான் நாம் வெளிவந்தோம். நாம் வராவிட்டால் உம்மை எப்படி அறிந்துகொள்ள முடியும்.

**இறை கேட்டது:** அப்போது என்ன நடந்தது?

**யான் விடுத்தது:** சிறிது சிறிதாய் முழுமை பிரியத்தொடங்கிற்று.

**இறை கேட்டது:** நானானது நாமானது எப்படி?

**யான் விடுத்தது:** இறைவா, நான் மிக நுணுக்கமாய்ப் பி ரி ந் தே ன் . நுண்ணணுக்களானேன். அப்படிப் பிரிந்த என்னிலிருந்தே

ஐம்பூதங்களும் பிரிந்தன. இதுவே தான் நானாயிருந்த நான் நாமானவாறு.

**இறை கேட்டது:** இஃதெல்லாம் என்ன?
**யான் விடுத்தது:** இறைவா, இவைகள்தாம் இயலாகத் தாமாயியன்ற இயற்கை.

**இறை கேட்டது:** இயற்கை யென்பது என்ன?
**யான் விடுத்தது:** இறைவா, செயற்கையும் சேர்ந்த இயற்கையென்றேன்.

**இறை கேட்டது:** இதற்குமேல் வேறேதுமுண்டா?
**யான் விடுத்தது:** இறைவா, இல்லையென்றேன்.

**இறை கேட்டது:** இதனை வேறு என்னவெனக் கூறலாம்.
**யான் விடுத்தது:** இறைவா, இதனை ஆரம்பம் முடிவற்ற, எதற்குமிணையற்ற முழுச்சத்திமயமான பரிபூரணமான பிரபஞ்சம் எனவும் கூறலாம்.

**இறை கேட்டது:** அப்படியாயின் என்னிலிருந்து நீர் வெளியாகாமலிருந்தால் இந்தத் தோற்றமும் பார்வையும் இருந்திருக்கா என்பது உண்மை யென்கிறீரா?
**யான் விடுத்தது:** இறைவா, ஆம், உண்மைதானே. என்னில் உன்னை நான் பார்க்கின்றேன். நீ உன்னில்

என்னைப் பார்க்கிறாய். இதிற்றான் நான் நீ என்னும் பிரிந்த பார்வை வந்தது. அதில் நான், நீ எனப்பாராமலும் முழுமையாகக் காண்பதே முழுமையாகும். நான் நீயாகவும் நீ நானாகவும் பிரிவின்றி எப்போதும் என்னில் உன்னையும் உன்னில் என்னையும் பார்த்துக் கொண்டிருப்பதே உண்மையான முழுத்தோற்றமாகும். இப்போதும் எப்போதும் யான் உன்னிலிருந்து வெளியான போதும் எல்லாத் தோற்றமும் ஒன்றேயெனக் கொண்டு பரிபூரணத்தில் கடலில் அலை கலப்பது போலக் கலந்து இலயித்து நிலைத்து நிற்பதிலே இன்பம் கண்டிருப்பின் வெளியாகா திருப்பினும் வெளித்தோன்றி யிருப்பினும் இரண்டும் பிரம-இரண்டறக்கலந்த சூனிய அமாவான, அந்தகமான, தத்துவ



மசி நிலையாகும். சூனியமாய் எப்படியிருந்தோமோ, அப்படியே இப்போதுமிருக்கிறோம் எனும் நிலை கொள்ளல் வேண்டும். அதுவே சாலச்சிறந்தது.

**இறை கேட்டது:** நான் ஏன் வெளிப்பட விரும்பினேன்?

**யான் விடுத்தது:** இறைவா, நீ வெளியானமையால் நாம் அளவுகடந்த நன்மை பெற்றோம். ஊமைபோலிருந்த நாம் வெளிப் படையாகப் பேசத் தொடுத்தோம். பார்வையற்றவர்கள் போலிருந்த நாம் வெளிப் படையாய்ப் பார்க்கத் தொடுத்தோம். மறைந்திருந்த செயல்களெல்லாம் வெளிப்படத் தொடங்கின. பொது வாகவிருந்த நாம் தனித்துச் செயற் படத் தலைப்பட்டோம். கடல் நீர்ப்போன்றிருந்த நாம் உப்பாகி





உபயோகமானோம். வித்தாகியிருந்த நாம் ஆல் போல் விரிந்து உபயோகமானோம். மொட்டா யிருந்த நாம், பூவாகி எழிற்றோற்றங் கொண்டோம். வெற்று நிலமாக விருந்த நாம் பூங்காவானோம். வண்ணத்தோற்றங்கண்டோம். இன்புற்றோம். தங்கத்தகடன்ன விண்தோன்றும் கதிரவனைக் கண்டோம். வெள்ளித்தட்டென விண் மிதக்கும் வண்ணத்தகடான வெண் மதியைக் கண்டோம். விண்ணில் விரித்த நீல நிறப்பந்த ரெனத்திகழும் நீல வானில் முத்தங்கள் பதிக்கப்பட்டு மின்னிலங்கும் விண்மீன்களில் வண்ணவழகினைக் கண்டோம். பன்னிறங்கள் தோன்றித் தோன்றிச் செக்கர் வானின் இயற்கை யென்னும் கைவண்ணம்

விளையாடும் திருவிளையாடலைக் கண்டோம். கடலைக்கண்டோம். மலையைக் கண்டோம். விளையக்கண்டோம். பச்சைப் பரமதாணி விரிக்கப்பட்ட தென்னத் தோன்றும் பசும் புற்றரையின் எழிலையும், வயனிலங்களின் வண்ண வடிவங்களையும் கண்ணுற்றோம்.கண் குளிர்ந்தோம். பயனடைந்தோம். நாமும் நம்மை யறிந்தோம். இவ்வள(வு) மகா சக்தி நம்மில் மறைந்திருந்ததை உணர்ந் தோம். நீயும் நானும் ஒன்றே யென்னும் நித்திய நிலை யெய்தினோம். பெரும் பேறு பெற்றோம். இதுவே வெளியானதன் நன்மை யெனக்கண்டு உனக்குச் சாட்டாங்கம் செய்தோம். நிலை மாறாத இதே நிலையை எமக் கென்றென்றும் தந்தருள் பாலிப்பாயாக எனப்பிரார்த்தித்தோம்.



யாவும் ஊரே யாவருங்கேளிர் எனும் ஒற்றுமையும் எல்லாம் ஒன்றே எனும் ஒருமைத்துவமும், வேற்றுமையற்ற மனிதநேயமும் என்றென்றும் எங்கணும் மிளிர்க. ஞான மார்க்கம் எங்கணும் பரவ மானிடவினம் ஒன்றென ஞாலமெல்லாம் பறை சாற்றி சங்கநாதம் பரப்புவோம். ஞாலமெல்லாம், ஞான ஒளி பரவி ஈன வேற்றுமைகளும் பகையும் பொறாமையும் பொய்யும் வேரறுந்து போகத் துணை புரிவோம்.

**ஞானம் வாழ்க! வளர்க! மிளிர்க!**

**(முற்றும்)**

